செய்தி வெளியீடு எண்: 543 நாள் 09.10.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று (9.10.2013) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. **கே.டி.ராஜேந்திரபாலாஜி** அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

2011–2012 ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 9.07 லட்சம் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

மேலும், 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 7.56 லட்சம் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள், வழங்க உத்தரவிட்டதன்பேரில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 90 சதவீதம் மடிக்கணினிகள் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டும் (2013–14), மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 5.65 லட்சம் விலையில்லா மடிக்கணினிகளை மேல்நிலை பள்ளி மாணவர்கள் மற்றும் பல்தொழில் கல்வி நிறுவன மாணவர்களுக்கு வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் மடிக்கணினிகளை கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு பணிகளை விரைந்து முடித்து விரைவில் மாணவ மாணவியர்களுக்கு வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும், அனைத்து மாவட்டங்களில் விநியோகிக்கப்படவிருக்கும் மடிக்கணினிகளின் எண்ணிக்கை, சேவை மையங்கள், மடிக்கணினிகளை பாதுகாப்பு செய்தல், வைப்பதற்கான அறைகள் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சாந்தினி கபூர், இஆப, தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர், திரு. தா.கி. ராமச்சந்திரன், இஆப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு அதுல் ஆனந்த், இஆப, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு.வி.சி.ராமேஸ்வரமுருகன், கல்லூரிக் கல்வித் துறை, தொழில் நுட்பக் கல்வித் துறை, மற்றும் இதர சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.